# சுபீட்சம்

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 18.07.2023 supeedsam.com supeedsam@gmail.com


## மட்டக்களப்பில் அனுமதிபத்திரமின்றி சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் வண்டிகளுக்கு எதிர்ப்பு

# சாணக்கியன் மீது தாக்குதல் முயற்சி

### தாக்க முற்பட்டவர்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் துரத்தி துரத்தி அடித்த சம்பவத்தையடுத்து பெரும் பதற்றம்





(கனகராசா சரவணன் )

மட்டக்களப்பில் அனுமதிபத்திரமின்றி சேவையில் ஈடுபடும் தனியார் போக்குவரத்து பஸ்வண்டிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று திங்கட்கிழமை (17) ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட நா.உறுப்பினர் சட்டவிரோத அனுமதிபத்திரம் வழங்கள் ஊழலில் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்த தனியார் போக்குவரத்து பொறுப்பதிகாரி தொடர்பாக ஊடகங்களுக்கு

02 ஆம் பக்கத்தில்...

## பாரிய மனித புதைகுழிகள் குறித்து அமெரிக்கா அவதானம்

### தமிழ் கட்சிகளிடம் ஜூலி சங் தெரிவிப்பு




வடக்கு தமிழ் கட்சிகளை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இன்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

அமெரிக்க தூதரகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி, புளொட், டெலோ ஆகிய கட்சிகள் கலந்துகொண்டன.

02 ஆம் பக்கத்தில்...

## தமிழர் விவகாரத்தில் பார்வையாளராக இருக்காதீர்கள்

### அமெரிக்காவிடம் சுட்டிக்காட்டிய சம்பந்தன்!



தமிழர்களுக்கு எதிராக நாட்டில் அரங்கேறும் விடயங்கள் தொடர்பில் அமெரிக்கா மௌனமாக - பார்வையாளர்களாக இருக்கக்கூடாது.

நீங்கள் பார்வையாளர்களாக இருந்தால் வடக்கு, கிழக்கில் தமிழ்பேசும் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்தவர்கள் என்பது

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கு மாகாண ஆளுநரை இழிவாக பேசியமைக்கு அமைச்சர் நசீர் அகமத் மன்னிப்புகோர வேண்டும்



( வாஸ் கூஞ்ஞ)

ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களுடைய பதவியையும் அவரை பற்றியும் மிக இழிவாக அமைச்சர் நசீர் அகமத் விமர்சித்திருக்கின்றார் ஒரு அமைச்சர் அந்தஸ்தில் இருக்கிற ஒருவர் இப்படி மிக மோசமான ஒரு கருத்தை சொல்லி இருப்பது கண்டிக்கப்பட வேண்டிய விடயம் என பாரளுமன்ற உறுப்பினரும் ரொலோ இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டிலே வடமாகாணம்இ கிழக்குமாகாணம்இ இந்த நாடு இங்கு இருக்கும் எல்லோரும் ஒன்று வடக்கு கிழக்கு தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடம் .

02 ஆம் பக்கத்தில்...

## கனேடிய உயர்ஸ்தானிகருடன் சிறீதரன் விசேட சந்திப்பு!



இலங்கைக்கான கனேடியத் தூதரகத்தின் உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ்க்கும், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்று யாழில்

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma :34598
25605: cicero

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை
பள்ளித் தலமனைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch,Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# இலங்கை எதிர்பார்க்கும் தேசிய நல்லிணக்கம் எது?

## சுவாமி விபுலானந்த அடிகளார் அன்று விடையளித்தார்

### நாளை அவருடைய 76 வது மகா சமாதி தினம்!



ஜூலை 1947 காலை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் ஆச்ரம வாயில் தூணைப் பிடித்த காட்சி

**இலங்கை எதிர்பார்க்கும் தேசியநல்லிணக்கம்!**

இலங்கையில் கல்விமுறைமை எப்படி அமையவேண்டும்? இனநல்லிணக்கம் தேசியநல்லிணக்கம் எவ்வாறு அமைய வேண்டும்? என்பதை இற்றைக்கு 100வருடங்களுக்கு முன்பே ஒரு தீர்க்கதரிசி சொல்லியிருந்தார்.

அவர்தான் அகிலம் போற்றும் உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ்வித்தகன் சுவாமி விபுலாநந்த அடிகளார். ஆம் உண்மையில் அவர் ஒரு தீர்க்கதரிசி.

உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் மகா சமாதி அடைந்து நாளை (19) புதன்கிழமை எழுபத்தாறு 76 வருடங்களாகின்றது.

அடிகளார் இவ்வவனியில் பிறந்து 131வருடங்களாகின்றன. அவர் பிறந்தது 1892.03.27 இல்.

20ஆம் நூற்றாண்டின் ஈடிணையற்ற பேரறிஞர் சுவாமி விபுலாநந்த அடிகளார் ஆவார்.

அவரது எல்லையற்ற மேதாவிலாசம் காரணமாக உலகின் பல பாகங்களிலும் அவர் பெயரில் பல அமைப்புகள் இயங்கிவருகின்றன.அவருக்காக பல நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. பல ஆய்வரங்குகள் நடாத்தப்பட்டிருக்கின்றன. அவர் சிவபதமடைந்தது 19.07. 1947இல்.

**சுவாமி விபுலானந்த அடிகளார் அன்று சொன்னது:**

'பலமொழிக்கல்வி தேசிய ஒருமைப்பாட்டையும் நாட்டினுள்ளும் நாடுகளிடையேயும் ஐக்கியத்தையும் உறுதிப்படுத்துகின்றது. சர்வதேச நல்லுறவையும் நன்முறையில் விருத்திசெய்வதற்குப் பல மொழிகளை ஆண்களும் பெண்களும் கற்றல் வேண்டும்' என்றார்.

பலதரப்பட்ட பாசைகளைக் கற்பதனால் அறிவு விசாலிக்கும் என்றுகூறிய அவர்

பாடசாலைகளில் கணிதம் விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு அப்பால் தொழிற்கல்வியையும் வழங்குவதே விரிவுக்கல்வியாகும். நல்லதிடகாத்திரமான உடல்நிலை உவப்பான உளவளர்ச்சி பன்பனவும் கட்டாயமானது என 1941இல் கூறினார்.

அதனால்தான் 1970களில் ஜேவிபி புட்சி அதனைத்தொடர்ந்து பிரதமர் ஸ்ரீமாவோ அம்மையார் இலங்கைமக்களை நாட்டுப்பற்றுடைய மக்களாக மாற்றவேண்டுமெனின் புதிய கல்வித்திட்டத்தை அறிமுகப்படுத்தவேண்டுமென்றெண்ணி க.பொ.த. சா.த பரிட்சை நிறுத்தப்பட்டு பதிலாக தேசிய கல்விச்சான்றிதழ் எனும் புதிய பரிட்சை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

முக்கிய பாடங்களுடன் தொழிற்கல்வியும் உடற்கல்வியும் கவின்கலைகளும் கட்டாயபாடமாக்கப்பட்டன. இம்மாற்றம் முழுக்கமுழுக்க விபுலானந்த அடிகளாரின் கல்விச்சிந்தனையில் எழுந்ததே என்பதை யாரும் மறக்கமுடியாது.

விரிவுக்கல்வியில் பெரிதும் நாட்டமுள்ள தாகூர் காந்தி பிறந்த நாட்டினில் இன்னும் விரிவுக்கல்வி நடைமுறையில் இல்லையென்பது இவ்வண் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

அப்படி இனங்கள் ஒன்றாக நல்லிணக்கத்துடனும் இனசௌயன்யத்துடனிருக்க வேண்டும் என்பதை அன்றே சிந்தித்தவர் சுவாமிகள். சிங்களமும் இஸ்லாமும் அறபும் சமஸ்கிருதமும் அவர் தோற்றுவித்த கல்லடி சிவானந்தாவில் கற்பிக்க ஏற்பாடுசெய்தவர். காத்தான்குடி முஸ்லிம்மாணவர்களும் பயிலவேண்டுமென்பதற்காக அவர் சிவானந்தாவை கல்லடியில் அமைத்தார்.

சுவாமியின் சமாதி தினம் சிறப்பாக அமைய இறைவனைப்பிரார்த்திப்போமாக.

**(வி.ரி.சகாதேவராஜா)**

## கிழக்கு மாகாண ஆளுநரை இழிவாக....

அதே போன்று மலைகத்தில் இருக்கின்ற எங்களுடைய தமிழர்கள் இங்கே வவுனியாவில் இருக்கிறார்கள் அவர்கள் மலைகள் தமிழர்கள் அல்ல அவர்கள் வவுனியா தமிழர்கள்

ஆகவே அந்தந்த பிரதேசங்களில் இருக்கிறவர்கள் அந்தந்த இடங்களில் ஆட்சி அமைப்பதுஇ வேலை செய்வது இ அவர்களின் உரிமை. அரசாங்க வேலை என்பது அந்தந்த ஊரில் வழங்குவதில்லை அரச உத்தியோகஸ்தர்கள் இலங்கையின் எல்லா இடத்திலும் வேலை செய்வார்கள் ஆகவே அமைச்சர் நஸீர் அகமட் தெரிவித்த கருத்தை மிகவும் வன்மையாக கண்டிக்கிறேன்.

செந்தில் தொண்டமான் கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் அவரை ஒரு ஆளுநர் என்றும் பாராது ஒரு திறமையானவர் என்று பாராது அந்த அரசாங்கத்திலிருந்து கொண்டு அவரை பொது வெளியில் ஏளனம் செய்கின்ற அமைச்சர் அவர்களுக்கு எனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தயவுசெய்து இப்பிடியான கருத்துக்களை பொது வழியில் சொல்லாதீர்கள் நீங்கள் இப்படியான கருத்துக்களை சொல்வீர்களா இருந்தால் நீங்கள் ஒரு மோசமான அமைச்சராக நீங்கள் ஒரு மோசமான சிந்தனை உடையவர்களாக கருதப்படுவீர்கள்.

ஆகவே உங்களுடைய மரியாதையை நீங்கள் காப்பாற்றிக் கொள்ளுங்கள் எங்களை பொறுத்த வரையிலே வடக்கு கிழக்கிலே குறிப்பாக கிழக்கிலே செந்தில் தொண்டமான; அவர்கள் ஆளுனராக வந்தது மிக மகிழ்ச்சியாக இருக்கிறது அவர் தன்னுடைய திறமையை நிச்சயம் காட்டுவார். நஸீர் அஹமட்டுக்கு ஒன்று சொல்கிறேன் வடக்கு கிழக்கு என்பது இணைந்த தாயகம் அதை பிரிக்க வேண்டும் என்று சொல்லுகின்ற உரிமை உங்களுக்கு இல்லை நீங்கள் அந்தத் தகுதியை இழந்து விட்டீர்கள் நீங்கள் பிரிக்க வேண்டும் என்று சொல்லுகின்ற அந்தஸ்து உங்களுக்கு இல்லை. இது வடக்கு கிழக்கு இணைந்து தாயகம் தமிழ் முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற ஒரு பிரதேசமாகத்தான் பார்க்கப்படுகின்றது ஆகவே நீங்கள் உங்களுடைய கருத்தை வாபஸ் பெற வேண்டும் இல்லை என்றால் உங்களுடைய மரியாதை இல்லாமல் போகும்.

நீங்கள் ஒரு அந்தஸ்தில் இருக்கிற நிலை நிச்சயமாக மக்களால் ஏளனம் செய்யப்படும் நீங்கள் அந்த அந்தஸ்தில் இருந்து அந்த தகுதியில் இருந்து கீழே இறக்கப்படுவீர்கள் என்று சொல்லிக்கொண்டு உடனடியாக நீங்கள் மன்னிப்பு கேட்டுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

## பாரிய மனித புதைகுழிகள் குறித்து அமெரிக்கா...

இந்தச் சந்திப்பு குறித்து தமது டுவிட்டர் பக்கத்தில் கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க தூதுவர், தமிழ்த் தலைவர்களுடன் ஆக்கப்பூர்வமான கலந்துரையாடலில் ஈடுபட்டதில் மகிழ்ச்சியடைகிறேன். உண்மை, நல்லிணக்கம் மற்றும் நீடித்த அமைதிக்காக இலங்கை பாடுப்படுகின்றமை குறித்தும் அதிகாரப்பகிர்வு, காணிகளை மீளப் பெறுதல் தொடர்பாக வடக்கு தமிழ் கட்சிகளுடன் கலந்துரையாடினேன்.

அத்துடன், காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கான நீதியை பெற்றுக்கொடுத்தல், பாரிய மனித புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளின் முக்கியத்துவம் பற்றி இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டதாகவும் அமெரிக்க தூதுவர் கூறியுள்ளார்.

அமெரிக்க தூதுவருடனான சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து ஒருவன் செய்திப் பிரிவுக்கு கருத்து வெளியிட்ட புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், நாட்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு நெருக்கடி நிலைமைகள் குறித்து அமெரிக்க தூதுவர் எம்முடன் அறிந்துக்கொண்டார்.

தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு மற்றும் காணாமல்போனோரது குடும்பங்களுக்கு நீதியை பெற்றுக்கொடும் செயல்பாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து அவரிடம் பேசியதாக சித்தார்த்தன் எம்.பி கூறினார்.

அத்துடன், நாட்டில் தொடர்ச்சியாக கண்டுப்பிடிக்கப்படும் பாரிய மனித புதைகுழிகள் குறித்து அமெரிக்கா கவனம் செலுத்தியுள்ளதாக தூதுவர் ஜூலி சங் கூறியதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் தெரிவித்தார்.

# நாட்டை அழித்த நம் நாட்டுத் தலைவர்கள்



**ஞா.ஸ்ரீநேசன்**
**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மட்டக்களப்பு**

இலங்கை சுதந்திரம் அடைந்த போது இலங்கையின் அந்நியச் செலாவணி வருவாய் பலமாக இருந்தது. அதாவது ஆசியாவில் யப்பானுக்கு அடுத்தநிலையில் இலங்கையின் வருவாய் காணப்பட்டது.சீனா, சிங்கப்பூர்,இந்தியா, தென் கொரியா போன்ற நாடுகள் எல்லாம் எமது நாட்டை விடப்பின் தங்கிய நிலைமையில்தான் காணப்பட்டன. ஆயின் எமது நாட்டை காலனித்துவ ஆட்சியின் கீழ் ஆட்சி செய்த பிரித்தானியர் பொருளாதாரத்தைக் குட்டிச்சுவராக்கவில்லை. நல்ல நிலையில்தான் வைத்திருந்தார்கள்.

டி.எஸ்.சேனநாயக்கவில் இருந்து கோத்தபய ராஜபக்ச வரை ஆட்சி செய்த தலைவர்கள்தான் எதிர்மறையான செயற்பாடுகளால் நாட்டின் பொருளாதாரத்தை அழித்துள்ளார்கள்.இதில் கோத்தாவுக்கு அதிக பங்குண்டு.

குறிப்பாக சிங்கள இனவாதம் பௌத்த மதவாதம் என்கின்ற இரட்டைப் பெற்றோல் குண்டுகளால் நாட்டின் தேசிய ஒற்றுமையை எரித்தார்கள்.மனித வளத்தையும் அழித்தும், அகற்றியும் விட்டார்கள். இனவாதத்தால் உள்நாட்டு யுத்தத்தினை ஏற்படுத்தி அந்த யுத்த வேள்வியில் மனித, பொருளாதார வளங்களை ஆகுதிகளாக்கி எரித்தார்கள்.

அரசியலையும் யுத்தத்தையும் வியாபாரமாக்கி ஆட்சியாளர்கள் பெரும் தனவந்தர்கள் ஆனார்கள். ஏற்றுமதிகள், இறக்குமதிகள், கொள்வனவுகள் கட்டுமானங்கள், தொழில் வாய்ப்புகள் அனைத்திலும் ஊழல் மோசடிகள் மூலமாகக் கறுப்புப் பணத்தினை ஆட்சியர்கள் குவித்தார்கள்.

பாதுகாப்புக்காகவும் படை பலத்துக்காகவும் பல்லாயிரம் கோடி ரூபாய்களைக் கொட்டினார்கள்.யுத்தம் முடிந்த பின்னரும் பிரித்தானிய வல்லரசை விட அதிகளவான படைகளை சிறிய குட்டி நாடு தாங்கி நிற்கின்றது. உலகநாடுகளில் படை எண்ணிக்கையில் 17வது இடத்தில் இந்நாடு உள்ளது.

மொத்தத்தில் இனவாத மதவாதத்தீயைக் கொண்டு யுத்த வேள்வியை நடாத்தி தாங்க முடியாத படைகளையும் சுமந்து. கடன் வெள்ளத்தில் நாடு மூழ்கிக் கொண்டுள்ளது.மேலும் ஊழல் மோசடி கையூட்டுகளாலும் திறனற்ற நிதி முகாமையாலும் நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ந்துள்ளது. அப்படி இருந்தும் திருந்தாமல் இனவாத மதவாதத் தீயை அரசியல்வாதிகள் கொழுத்திக் கொண்டே இருக்கிறார்கள். அபிவிருத்தி,தொல்லியல்,பாதுகாப்பு என்ற போர்வைகளில் 75 ஆண்டுகளாக நமது சிங்களத் தலைவர்கள் தேசிய ஒற்றுமையையும் பொருளாதார விருத்தியையும் எரித்து விட்டார்கள்.

நூறாண்டு கடந்தாலும் நாட்டை நல்வழிப்படுத்த சிங்களத் தலைவர்கள் இல்லையா? என்ற கேள்வியே மீதியாகவுள்ளது. நியாயமான வழியில் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாத தலைவர்கள் உள்ளவரை இந்த நாட்டுக்கு விடிவே கிடையாது.ராஜரத்ன,பண்டாரநாயக்க,சிறில்மத்தியூ,நெவில்பெர்னாண்டோ,ஜெயவர்தனா போன்றவர்கள் ஏந்திய இனவாத தீப்பந்தங்களை இன்று சரத்வீரசேகர,வீரவன்ச,உதயகம்மன்பில போன்றவர்கள் ஏந்தி நிற்கிறார்கள்.இப்படி இருந்தால்,நாடு தொடர்ந்தும் எரிவதற்கே வாய்ப்புகள் உள்ளன.

## தமிழர் விவகாரத்தில் பார்வையாளராக இருக்காதீர்கள்

அழிக்கப்பட்டு உரிமைகளை இழந்து அபிலாஷைகளை நிறைவேற்ற முடியாமல் ஒதுங்க வேண்டிய நிலைமை ஏற்படும்.இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், தன்னை நேரில் சென்று சந்தித்தபோது மேற்கண்டவாறு கூறியதாகக் குறிப்பிட்ட சம்பந்தன், இந்தச் சந்திப்பு தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வியாழக்கிழமை அமெரிக்கத் தூதுவர் என்னை வந்து சந்தித்தார். முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார். நல்லதொரு சந்திப்பு. மாலை 5.30 மணி முதல் 6.45 மணி வரை என்னுடன் அவர் பேசினார்.

இலங்கையின் தற்போதைய நிலைமை, அரசியல் தீர்வு விடயம், தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்படுகின்ற பல்வேறு விதமான மாற்றங்கள், தமிழ்பேசும் மக்களின் எண்ணிக்கையைக் குறைத்து - தமிழ்பேசும் மக்களின் சரித்திர பீதியான இடங்களை அழித்துவிடும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் முயற்சிகள், வடக்கு - கிழக்கில் இராணுவப் பிரசன்னத்தின் அதிகரிப்பு மற்றும் வடக்கு - கிழக்கு மீளிணைப்பு தொடர்பில் அவரிடம் எடுத்துரைத்தேன்.இந்த நடவடிக்கைகள் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்கள் மற்றும் சர்வதேச ஒப்பந்தங்களுக்கு முரணானவை என்றும் அவரிடம் சுட்டிக்காட்டினேன்.

பொறுப்புக்கூறல் உள்ளிட்ட ஐ.நா. தீர்மானங்களின் பரிந்துரைகளை இலங்கை அரசு இன்னமும் நடைமுறைப்படுத்தாமல் அசண்டையீனமாகச் செயற்படுகின்றது என்றும் அமெரிக்கத் தூதுவரிடம் கூறினேன்.இந்த விடயங்கள் தொடர்பில் நீங்கள் மௌனமாக - பார்வையாளர்களாக இருக்கக்கூடாது.

நீங்கள் பார்வையாளர்களாக இருந்தால் வடக்கு, கிழக்கில் தமிழ்பேசும் மக்கள் சரித்திர பீதியாக வாழ்ந்து வந்தவர்கள் என்பது அழிக்கப்பட்டு - உரிமைகளை இழந்து - அபிலாஷைகளை நிறைவேற்ற முடியாமல் ஒதுங்க வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே, தமிழ் பேசும் மக்களுக்கு உரிய அந்தஸ்தை வழங்க வேண்டும் என்று கூறினேன்.ஆட்சி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு தமிழ்பேசும் மக்கள் சுய மரியாதையுடன் - சுய கௌரவத்துடன் - சகல உரிமைகளுடன் சந்தோசமாக வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்றும் தெரிவித்தேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தக் கருமங்களை நிறைவேற்றுவாரா என்று அமெரிக்கத் தூதுவர் என்னிடம் கேட்டார்.

நானும் அவரும் 1977ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்கு ஒன்றாக வந்தோம். அவரைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். அவர் துவேசவாதி அல்லர்.

அவருக்குப் போதிய ஆதரவு இருந்தால் இந்தக் கருமங்களை அவரால் நிறைவேற்ற முடியும் என்று தெரிவித்தேன். - என்றார்.

## கனேடிய உயர்ஸ்தானிகருடன் சிறீதரன் விசேட சந்திப்பு!

இடம்பெற்றது. இதன்போது, தமிழர்கள் நலன்சார் செயற்பாடுகளிலும், இன அழிப்புக்கான நீதிகோரல் செயன்முறையிலும் கனடா அரசாங்கம் தொடர்ச்சியாக குரல்கொடுத்து வருவதற்கு தனது நன்றியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் வெளியிட்டார்.

இலங்கையில் நடைபெற்றது இன அழிப்புத்தான் என்பதையும் அதற்குரிய நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தி கனேடிய நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக, அப்பிரேரணைக்கு வலுச்சேர்க்கும் வகையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக்கிளையினால் நடத்தப்பட்ட நிகழ்வையும் கனேடிய உயர்ஸ்தானிகர் நினைவுகூர்ந்திருந்தார்.

அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு, பல்லின சமூகங்கள் வாழும் கனேடிய நாட்டைப் பின்பற்றி இலங்கையில் சமஸ்டியை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ள யதார்த்தப் புறநிலைகள், வடக்கு - கிழக்கின் 80 வீதமான நிலங்கள் வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், கடலோர காவல் திணைக்களம், தொல்பொருளியல் திணைக்களம் என்பவற்றால் தொடர்ச்சியாக பறிக்கப்படுகின்றமை, இன, மத, மொழி பீதியான ஆக்கிரமிப்புகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

போருக்குப் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள 4374.8 ஏக்கர் காணிகள் தொடர்பான விவரமும், 2009 இக்குப் பின்னர் வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களை அபகரித்து, அவ்விடங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 71 விகாரைகள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால், கனேடிய உயர்ஸ்தானிகரிடம் விரிவான அறிக்கையொன்றும் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் அனுமதிபத்திரமின்றி சேவையில் ஈடுபடும் தனியார்..

கருத்து தெரிவித்தபோது; அவரை தாக்க முற்பட்ட இருவரை ஆர்ப்பாட்காரர்கள் துரத்தி துரத்தி அடித்து வெளியேற்றியதையடுத்து அங்கு பெரும் பதற்ற நிலை.

மட்டக்களப்பு தனியார் பஸ்வண்டி உரிமையாளர்கள் சங்கம் போக்குவரத்து அனுமதிப்பதிரம் இன்றி சேவையில் ஈடுபடும் பஸ்வண்டிகளை தடைசெய்ய கோரி மட்டு தனியார் பஸ்வண்டி நிலையத்தில் அனைத்து பஸ்களையும் நிறுத்தி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இந்த ஆர்பாட்டத்திற்கு நா.உறுப்பினர் சாணக்கியனுக்கு தனியார் பஸ்வண்டி உரிமையாளர்கள் சங்கம் அழைப்பு விடுத்ததையடுத்து அவர் ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டு பொலனறுவையில் உள்ள தனியார் பஸ்வண்டி உரிமையாளர் ஒருவரின் இரு பஸவண்டிகளுக்கு ஒரு போக்குவரத்து அனுமதி பத்திரத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் கிழக்கு மாகாண தனியார் போக்குவரத்து சபையில் மட்டக்களப்பில் பொறுப்பாளராக கடமையற்றி வந்த அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினர் கடந்த 8 வருடங்களாக குறித்த பஸ்வண்டி சேவையில் ஈடுபட அனமதி வழங்கி ஊழில் புரிந்துள்ளதாடகவும் அந்த பஸ்வண்டியின் உரிமையாளரின் பஸ்வண்டியே மட்டக்களப்பு வாழைச்சேனை வரையிலான அனுமதி பத்திரத்துடன் பொலன்னறுவை கதுருவெலவில் இருந்து காத்தான்குடி வரையில் சட்டவிரோதமாக சேவையில் ஈடுபட்டுள்ள போது மன்னம்பிட்டி விபத்தில் 11 பேர் உயிரிந்துள்ளனர்.

இவ்வாறு சட்டவிரோதமாக அனுமதிபத்திரமின்றி போக்குவரத்து சேவையில் ஈடுபட அனமதி வழங்கிய கிழக்கு மாகாண தனியார் போக்குவரத்து சபை பணிப்பாளர் உட்பட அதிகாரிகள் இந்த மன்னம்பிட்டியில் 11 பேரையும் படு கொலை செய்துள்ளனர் என ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துக் கொண்டிருந்தார்.

இந்த நிலையில் அங்கு இருந்த இருவர் நா.உறுப்பினர் சாணக்கியன் மீது உண்மைக்கு புறம்பாக பேசவேண்டாம் என பேசியவாறு தாக்க முற்பட்ட நிலையில் அங்கிருந்த பஸ்வண்டி உரிமையாளர்கள் மற்றும் ஆர்பாட்டகாரர்கள் ஒன்றிணைந்து அந்த இருவரையும் அங்கிருந்து துரத்தி துரத்தி அவர்கள் மீது தாக்குதல் நடாத்தினர். இதனையடுத்து அந்த பகுதியில் பெரும் பதற்றம் நிலவியதையடுத்து பொலிசார் குழப்பு நிலையை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்ததையடுத்து ஆர்ப்பாட்ட காரார்கள் அங்கிருந்து விலகி சென்றனர்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாறான அராஜகங்களுக் நாங்கள் இடமளிக்க கூடாது தனிநபர்களுக்காக வக்காளத்து வாங்கி இந்த குழப்பத்தை ஏற்படுத்தியதை வன்மையாக கண்டிக்கின்றோம் அதேவேளை கொல்லப்பட்ட 11 பேரின் நீதி கிடைக்க வேண்டும் இந்த சட்டவிரோத அனமதிபத்திரம் வழங்கியமை தொடர்பாக பாராளுமன்றத்தில் பேசுவதுடன் நாளை ஜனாதிபதியுடனான இரசியல் சந்திப்பின் போது இந்த வவிடையத்தை விசேடமாக பேசவுள்ளதாக சாணக்கின் தெரிவித்தார்.

# கோமாரி பால்குடிக்குளம் புனரமைப்புக்கு வன பாதுகாப்புத் திணைக்களம் அனுமதி மறுப்பு

## உரிய அமைச்சருடன் கலந்துடியாடி பிரச்சனைக்குத் தீர்வு பெற்றுத் தருவதாக பா.உ கலையரசன் மக்களிடம் தெரிவிப்பு




(சுமன்)

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட குளங்களை உலக வாங்கியின் 75 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் மூலம் புனரமைப்புச் செய்து விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் கோமாரி பிரதேச பால்குடிக்குளத்தினைப் புனரமைப்புச் செய்வதற்கு வன பாதுகாப்புத் திணைக்களம் அனுமதி மறுத்து வருகின்றது.

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீகழ் வரும் இக்குளமானது புனரமைப்புச் செய்யப்படுமிடத்து சுற்றுயுள்ள 250 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்யக் கூடிய நிலைமை ஏற்படும்.

மேற்படி குளத்தின் புனரமைப்பு தொடர்பில் அனுமதி மறுக்கப்பட்டமையை பிரதேச மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தமையையிட்டு மேற்படி பிரதேசத்திற்குக் களவிஜயம் மேற்கொண்டு குளத்தினையும், குறித்த விவசாய நிலங்களையும் பாராளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டிருந்தார்.

அதடினைத் தொடர்ந்து முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சுபோகரன் தலைமையில் கோமாரி பல்தேவைக் கட்டடித்தில் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரதேச மக்களுடனான கலந்துரையாடலிலும் கலந்த கொண்டு குறித்த விடயம் தொடர்பில கலந்துரையாடப்பட்டது.

இதன்போது வனபாதுக்காப்பு அமைச்சருடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடி உரிய அனுமதியைப் பெற்று இக்குளத்தினைப் புனரமைப்பச் செய்வதற்கு ஆவன செய்து வருவதாகப் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் சிறப்புடன் இடம்பெற்ற நடன பயிற்சிப்பட்டறை



(வாஸ் கூஞ்ஞ)

நடனத்துறையில் ஆர்வம் உள்ள இளைஞர் யுவதிகளின் திறமையை மெருகேற்றும் விதமாக மாவட்ட ரீதியாக உள்ள சிறுவர் இசிறுமியர்இஇளைஞர் யுவதிகளை ஒன்றினைத்து இரண்டு நாள் நடன பயிற்சி பட்டறை சனிக்கிழமை (15) மற்றும் ஞாயிற்றுக்கிழமை (16) இரண்டு தினங்கள் மன்னார் வங்காலை டான்ஸிங் டைமன்ஸ் நடன பயிற்சி கல்லூரியில் இடம் பெற்றது.

மன்னார் டான்ஸிங் டைமன்ஸ் பயிற்சி கல்லூரியின் ஒழுங்கமைப்பில் அதன் நிறுவனர் அர்ஜுன் லெம்பேர்ட், ரஞ்சித்இநிருஸிஇ எவரஸ்ரா ஆகிய நடன ஆசிரியர்கள் இணைந்து குறித்த நடன பயிற்சி பட்டறையை நடத்தியிருந்தனர்

மன்னார் மாவட்ட முழுவதும் இருந்து சுமார் 50 க்கு மேற்பட்டவர்கள் குறித்த பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டனர்.

றநளவநசணஇஉடயளளஅடிஉயடஇகுழடம ஆகிய நடனங்களுக்கான பயிற்சிகள் மேற்படி பயிற்சிபட்டறை ஊடாக தெளிவுபடுத்தப்பட்டதுடன் தொடர்சியாக மன்னார் மாவட்டத்தில் உள்ள வெவ்வேறுபிராந்தியங்களில் குறித்த பயிற்சி பட்டறைகள் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இருண்ட கால அனுபவங்கள் மீண்டும் ஏற்படாமல் இருக்க அனைத்து மக்களும் வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்

## அமைச்சர் மனு நாணயக்கார




(வாஸ் கூஞ்ஞ)

எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாட்டுடனான 30 வருடகால இருண்ட அனுபவத்தை வடக்கு மக்கள் அனுபவித்தனர். இதே அனுபவங்களை சில காலதிற்கு பொருத்துக்கொள்ள முடியாத தெற்கு மக்கள் ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்தியதுமாத்திரமின்றி வீடுகளையும் பொது சொத்துக்களையும் தீயிட்டுக்கொளுத்தினார்கள். கொலையும் செய்தார்கள் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் திரு. மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

நல்லிணக்கத்தின் மூலம் வடக்கு மக்களிடையே நல்லுறவை முன்னெடுக்கும் வகையில் யாழ் முற்றவெளி விளையாட்டரங்கில் நடைபெறும் எடுணிஞ்ச்டூ ஊச்டிணூ 2023 கண்காட்சி மற்றும் நடமாடும் சேவையின் இரண்டாம் நாள் நிகழ்வு ஞாயிறு காலை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலைமையில் ஆரம்பமானது. இங்கு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்

இங்குள்ள இளைஞர்கள் மற்றும் யுவதிகளுடன் உரையாடுவதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. தெற்கிலுள்ளவர்களைப்போன்றே என்னுடன் உரையாடினார்கள்.அவர்களது உள்ளங்களை புரிந்துகொள்ள முடிந்தது.அவர்களின் ஏக்கத்தையும் எதிர்பார்ப்பையும் புரிந்துகொண்டேன் இதனால் தான் காலியில் அமைக்க திட்டமிட்டிருந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தொழில் பயிற்ச்சி நிலையத்தை யாழ்பாணத்தில் அமைக்க நான் தீர்மானித்தேன் என்றும் அமைச்சர் கூறினார். 30 வருடகாலம் அனுபவித்த இருண்ட கால அனுபவத்தை வாய்யிட்டு கூற முடியாத போதிலும் அந்த காலப்பகுதியில் வடக்கு மக்கள் தமது மழலைச் செல்வங்களை கல்வியில் மேலோங்கச் செய்தார்கள். இவர்களின் ஆற்றல்களால் கல்வியில் எடுத்துக்காட்டாக விளங்கும் வடக்கு மாணவர்களை தெற்கிலுள்ள நாம் உதாரணமாகக்கொள்ள வேண்டும். இவ்வாறான ஆற்றலை எடுத்துக்காட்டுவதற்கு வெளிநாடுகளின் உதாரணங்கள் தேவை இல்லை என்பதை தெற்கிலுள்ளவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்று குறிப்பிட்ட அமைச்சர் கல்வித்துறையில் சிறந்து விளங்கும் வடக்கு மாணவர்களை உதாரணமாகக்கொள்ள வேண்டும் என்று எனது பிள்ளைகளுக்கும் அறிவுறுத்தியிருப்பதாக அமைச்சர் கூறினார்.

எரிபொருள் தட்டுப்பாடு உணவுப்பொருள் விலை அதிகரிப்பினால் அனுபவித்த சிரமங்களினால் தெற்கு மக்களின் செயற்பாடுகளை மேலும் சுட்டிக்காட்டிய அமைச்சர் ஆத்திரமடைந்த தென்பகுதி மக்கள் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவைக் கூட விரட்டியடித்தார்களா.... ? அவருக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தினார்கள் என்றும் தெரிவித்த அமைச்சர் இவ்வாறான சூழ்நிலையில் வீழ்ச்சி கண்ட நாட்டை மீட்டெடுக்க எவரும் முன்வராத நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பேற்றார். முன்னைய அரசியல்வாதிகளே இனமத ரீதியாக எங்களை பிரித்து பிளவுபட வைத்தனர். ஆனால் தற்போதைய ஜனாதிபதி அனைவரையும் இன மத ரீதியாக ஒன்றிணைத்து நல்லிணக்கத்தையும் சமத்துவத்தையும் ஏற்படுத்தி வருகிறார். அவருடன் இணைந்து இதற்கான அர்ப்பணிப்புக்காக நானும் செயல்பட்டுவருகின்றேன் என்றார் அமைச்சர்.

தெற்கைச் சார்ந்திருந்த போதிலும் மீண்டும் ஒரு இருண்டகாலம் எமது நாட்டிற்கு ஏற்படக்கூடாது என்ற இலக்குடன் வடக்கு தெற்கு என்ற வேறுபாடின்றி நல்லிணக்கத்துடன் அனைத்து மக்களின் நலனுக்காக செயல்பட்டு வருகின்றேன். நல்லிணக்கம் என்பது வார்த்தைகளில் அடங்கிவிடக்கூடாது என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடு அதே இலக்குடனேயே நானும் செயல்பட்டுவருகின்றேன் என்றும் கூறினார்.

# கவனயீர்ப்பு போராட்டம்







(தலவாக்கலை பி.கேதீஸ்)

சம்பளம் மற்றும் ஊழியர் நலன் புரி நிதியை உரிய முறையில் வழங்குமாறு கோரி கொத்மலை, இறம்பொட, ஆர்.பி.தோட்டத் தொழிலாளர்கள் நேற்று முன் தினம் (16) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பல மாதங்களாக தமக்கு சம்பளம் வழங்கப்படவில்லை எனவும், தொழிலாளர் கொடுப்பனவுகள் மற்றும் தொழிலாளர் நம்பிக்கை நிதிகள் முறையாக வழங்கப்படவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தோட்ட தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். நுவரெலியா கண்டி பிரதான வீதியின் ரம்பொட, புளூங்பீல்ட் பகுதியில் தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.தமக்கான தொழில் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் இறம்பொடை ஆர்.பீ. தோட்ட மக்கள் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# பறப்பாங்கண்டல் கார்மேல் மாதா ஆலய பெருவிழா



( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறைமாவட்டத்தில் பறப்பாங்கண்டல் புனித கார்மேல் மாதா ஆலய பெருவிழா ஞாயிற்றுக்கிழமை (16) பங்குத் தந்தை அருட்பணி சவுல்நாதன் அடிகளாரின் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி கி.அன்ரனிதாஸ் டலிமா அடிகளார் தலைமையில் அருட்பணியாளர்கள் எமில்ராஸ் மற்றும் நீக்கிலாஸ் அடிகளார்கள் இணைந்து கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து திருச்சுரூப பவனியும் திருச்சுரூப ஆசீரும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டன.

# காத்தான்குடி கோட்டக் கல்வி அதிகாரி இடமாற்ற விடயத்தை இனரீதியாக பார்த்து குழப்பம் ஏற்படுத்த வேண்டாம்

## அமைச்சர் நசீர் பூரண விளக்கம் பெற வேண்டும் என்கிறார் பா.உ ஜனா

(சுமன்)

காத்தான்குடி கோட்டக் கல்வி அதிகாரி இடமாற்ற விடயத்தை தயவு செய்து இனரீதியாக பார்த்து அமைச்சர் நசீர் அகமட் அவர்கள் குழப்பத்தை ஏற்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். பூரண விளக்கம் இல்லாமல் தேவையற்ற விதத்தில் ஆளுநரை அவமதிப்பது, குற்றம் சாட்டுவது பொருத்தமானதல்ல என தமிழ்த் தேசியக் கூட்டமைப்;பின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்தார்.

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் காத்தான்குடி கோட்டக் கல்வி அதிகாரி இடமாற்ற விடயம் தொடர்பில் ஆளுநருக்கு எதிராகக் கருத்து வெளியிட்டமை மற்றும் இப் பிரச்சனை தொடர்பில் பா.உ ஜனா அவர்களின் பெயரும் பிரஸ்தாபிக்கப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கிழக்கு மாகாணத்தை ஆள்வதற்கு செந்தில் தொண்டமான் யார் என்று அமைச்சர் நசீர் அகமட் காத்தான்குடி பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலே கேள்வியெழுப்பியிருந்தார்.

இது தற்போது ஒரு பெரிய சர்ச்சையாக கிழக்கு மாகாணத்திலே உருவெடுத்திருக்கின்றது. அமைச்சர் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். 13வது திருத்தச் சட்டத்தினூடாக வந்த மாகாணசபை முறையில் மாகாணசபையில் அரசியல் ரீதியான பிரதிநிதிகள் இல்லாதவிடத்து முழு மாகாணத்தின் அதிகாரமும் ஆளுநரின் கைகளில் தான் இருக்கின்றது. மாகாணத்தை ஆள்வதற்கு செந்தில் தொண்டமான் யார் என்ற கேள்வி ஒரு பிரயோசனம் அற்றதாகவே இருக்கின்றது. தற்போதைய நிலையில் ஆளுநர் அவர்கள் தான் மாகாணத்தை ஆட்சி செய்யும் கடமையில், பொறுப்பில் இருக்கின்றார்.



காத்தான்குடி கோட்டைக் கல்வி அதிகாரியின் இடமாற்றம் என்பது உண்மையிலேயே ஒரு பழிவாங்கலாக ஆளுநர் அவர்கள் செய்யவில்லை என்றே கருதுகின்றேன். கோட்டைக் கல்வி அதிகாரியாக இலங்கை கல்வி நிருவாக சேவையைச் சேர்ந்தவர் தான் இருக்க வேண்டும் என்று சுற்றுநிருபம் இருக்கின்ற காரணத்தினாலும், வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசின் அடிப்படையிலும சம்மந்தப்பட்டவர் ஆளுநரை அனுகியிருந்தார். அந்த விடயத்திலே ஆளுநரிடம் அவரை சிபாரிசு செய்யுமாறு என்னிடமும் கேட்கப்பட்டது. அவரது தகமையின் அடிப்படையில் அவரை நானும் சிபாரிசு செய்திருந்தேன். ஏற்கனவே கோட்டைக் கல்வி அதிகாரியாக இருந்தவர் அதிபர் தரத்திலானவர். அவரிடம் ஏற்கனவே கிழக்கு மாகாண செயலாளரினால் வலயக் கல்விப் பணிப்பாளருக்குக் கோரப்பட்டது அவருக்கு ஒரு பொருத்தமான பாடசாலையைக் கொடுக்குமறு. ஆனால் அவர் அந்த இலங்;கை கல்வி நிருவாக சேவை அதிகாரியிடம் பொறுப்புகளை ஒப்படைக்காமல் அடம்பிடித்ததன் காரணமாகத் தான் அந்த அதிபர் மாவட்டம் விட்டு மாவட்டத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளதாக நான் அறிகின்றேன்.

அதாவது மேலதிகாரியான மாகாண கல்வி அமைச்சின் செயலாளரது உத்தரவுக்குக் கட்டுப்படாததன் காரணமாகத்தான அவர் இடம் மாற்றப்பட்டுள்ளதாக அறிகின்றேன். அந்த ரீதியில் நசீர் அகமட் அவர்கள் பூரண விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தேவையற்ற விதத்தில் ஆளுநரை அவமதிப்பது, குற்றம் சாட்டுவது பொருத்தமானதல்ல.

இந்த அறிக்கையை நான் வெளியிட வேண்டிய அவசியம் என்னவென்றால் இந்த விடயத்தில் நானும் தொடர்புபட்டவன். என்னுடைய பெயரும் அந்த பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலே எடுக்கப்பட்டது என்ற காரணத்தினாலேயே இந்த விளக்கத்தைக் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

தயவு செய்து இதனை இனரீதியாக பார்த்து அமைச்சர் அவர்கள் குழப்பத்தை ஏற்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். இந்த ஆளுநர் வந்ததன் பிற்பாடுதான் இந்த மாகாணத்திலே ஓரளவிற்கு இனப்பாகுபாடற்ற, மதப் பாகுபாடற்ற வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்கனவே இருந்த ஆளுநர் அனுராதா ஜகம்பத் அவர்கள் ஒரு இனத்திற்காக மாத்திரம் வேலை செய்து ஏனைய பெரும்பான்மையாக வாழும் தமிழ் பேசும் இனங்களை ஒதுக்கியிருக்கும் போது நசிர் அகமட் அமைச்சராக இருந்து கொண்டு அவருக்கு எதிராகப் பேசாதவிடத்து தற்போது இந்தச் சிறிய பிரச்சினையைப் பூதாகரமாக எடுப்பது வேண்டத்தகாத விடயம் என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

# குளவி கொட்டி பெண் தொழிலாளி மரணம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்பரகலை தோட்டத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகி பெண் தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர். லிந்துலை பம்பரகலை நடு பிரிவைச் சேர்ந்த வீரையா மாரியாய் வயது (80) என்பவரே இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். குறித்த பெண் தொழிலாளி ஓய்வு பெற்ற நிலையில் தற்காலிகமாக நாள் சம்பளத்திற்கு கொழுந்து பறித்து வேலை செய்து வந்துள்ளார்.

இவர் நேற்று (17) காலை தேயிலை மலையில் தேயிலை கொழுந்து பறித்துக்கொண்டிருந்த போது அங்கு மரத்திலிருந்த குளவிக்கூடொன்று கலைந்து இவரை கொட்டியுள்ளது. தோட்ட நிர்வாகத்தின் உதவியுடன் அவர் உடனடியாக லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். சடலம் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# தேரரை தாக்கியவர்களை ஏன் கைது செய்யவில்லை

## கேள்வி எழுப்பிய முன்னாள் அமைச்சர் விமலவீர

(பாறுக் ஷிஹான்)

போராட்டத்தில் பங்கேற்பதற்கு சென்றவர்களுக்கு அறிவுரை கூறியதன் பின்விளைவே தேரர் மீதான தாக்குதலாகும்.எனினும் தாக்குதல் மேற்கொண்டவர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். இத்தாக்குதலுக்கு உரிய நடவடிக்கை எதுவும் எடுக்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு பொலிஸார் இருக்கின்றனர்.இதனால் எமது நாட்டின் சட்டம் எங்கே செல்கின்றது என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுகின்றது என முன்னாள் வனஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான விமலவீர திசாநாயக்க தெரிவித்துள்ளார்.



அம்பாறையில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை(16) இரவு நடாத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது

கடந்த ஜுலை 10 ஆந் திகதி மாலை 7 மணியளவில் அம்பாறை மாவட்டம் தமண பிரதேச செயலகத்திற்குட்பட்ட பௌத்த விகாரை ஒன்றின் தேரர் ஒருவர் சிலரால் தாக்கப்பட்ட நிலையில் தற்போது சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.குறித்த தேரர் மீது ஐவர் கொண்ட குழு தாக்குதல் மேற்கொண்டிருந்ததாக அறிய முடிகின்றது.தற்போது தாக்குதல் இடம்பெற்று 6 நாட்கள் கடந்தும் கூட பொலிஸாரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

தேரரை தாக்கியவர்கள் என கூறப்படுபவர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றார்கள்.இவர்களுக்கு அரசியல் புலம் உள்ளதாக சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.மேலும் தேரர் அப்பகுதியில் மேற்கொள்ளப்படவிருந்த போராட்டத்தில் பங்கேற்பதற்கு சென்றவர்களுக்கு அறிவுரை கூறியதன் பின்விளைவே தாக்குதல் காரணமாக அமைந்திருக்கின்றது.பொலிஸார் இவ்விடயத்தில் அமைதியாக உள்ளனர்.

இதில் தமண பொலிஸ் பொறுப்பதிகாரி பொறுப்பு கூற வேண்டியவர்.இவர் பாரபட்சமாக உள்ளதாகவே மக்கள் தெரிவிக்கின்றனர்.இத்தாக்குதலுக்கு உரிய நடவடிக்கை எதுவும் எடுக்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு பொலிஸார் இருக்கின்றனர்.எமது நாட்டின் சட்டம் எங்கே செல்கின்றது என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுகின்றது. தாக்குதல் மேற்கொண்டதாக கூறப்படும் 2 பேரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி பிணையில் விடுதலை செய்யப்பட்டிருப்பதாக பிந்திய தகவல் கிடைத்தது.

ஆனால் இந்த தாக்குதல் விடயத்தில் பக்கச்சார்பாக பொலிஸார் நடப்பது என்பது ஏற்கமுடியாது.இவ்விடயத்தை சாதாரணமாக கடந்துவிட முடியாது.மக்கள் போராட்டம் ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவே இவ்விடயத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன் என்றார்.

# அமரர் கவிஞர் குறிஞ்சிவாணன் அவர்களின் நினைவுப்பேருரை அஞ்சலி நிகழ்வு









(திருக்கோவில் நிருபர் -எஸ்.கார்த்திகேசு)

அம்பாரை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தின் கலை இலக்கிய வளர்ச்சிக்கு பணியாற்றி அமரத்துவம் அடைந்த மலையக மணினை பிறப்பிடமாக கொண்ட கவிஞர் குறிஞ்சிவாணன் அவர்களின் நான்காவது ஆண்டு நினைவுப் பேருரையும் அஞ்சலி நிகழ்வும் அம்பாரை மாவட்ட திருவதிகை கலைக்கூடத்தின் ஏற்பாட்டில் திருக்கோவில் பிரதேசத்தில் உணர்வுபூர்வமாக இடம்பெற்று இருந்த

இவ் நினைவுப் பேருரை அஞ்சலி நிகழ்வானது அம்பாரை மாவட்ட ஏ.எஸ்.கே. திருவதிகை கலைக்கூடத்தின் உப தலைவர் இலக்கிய செயற்பாட்டாளர் எஸ்.பி.நாதன் அவர்களின் தலைமையில் திருக்கோவில் கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்று இருந்தன.

இதன்போது அமரர் கவிஞர் குறிஞ்சிவாணனின் திருவுருவப்படத்திற்கு அவரது மகள் தமிழ்செல்வி அவர்களினால் மாலை அணிக்கப்பட்டதோடு இந்து மதகுருமார்கள் மற்றும் அம்பாரைமாவட்ட ஏ.எஸ்.கே. திருவதிகை கலைக்கூடத்தின் கலைஞர்கள் இலக்கிய செயற்பாட்டாளர்கள் தீபம் ஏற்றி மலர் தூவி அஞ்சலிகளை செலுத்தியதோடு அவரைப் பற்றிய நினைவுப் பேருரைகளையும் சிரேஷ்ட கவிஞர்களால் நிகழ்த்தப்பட்டு இருந்தன.

அமரர் கவிஞர் குறிஞ்சிவாணன் அவர்கள் 1945 ஆண்டு பதுளை தேமோதரை எனும் இடத்தில் பிறந்த சி.வி.பி.மாணிக்கம் எனும் இவர் 1963ஆம் ஆண்டு வீரகேசரிப் பத்திரிக்கையில் வெற்றிநமதே எனும் கன்னிக் கவிதையுடன் இலக்கிய உலகிற்கு அறிமுகமாகி இருந்தார்.

இவர் 1968ல் தானே கல்லச்சு இயந்திரம் ஒன்றினை தயாரித்து 'மலைக்கீதம்' 'தேனிசை' எனும் இசைப் பாடல் தொகுதிகளையும் வெளியிட்டு இருந்ததோடு சுமாராக 1970 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மலையகத்தில் இருந்து இடம் பெயர்ந்து அக்கரைப்பற்று பின்னர் திருக்கோவில் பிரதேசம் சாகாமம் கிராமத்தில் குடியேரி தமது இறுதி காலம் வரை திருக்கோவில் பிரதேசத்தில் வாழ்ந்து பிரதேச இலக்கிய வளர்ச்சிக்காக குறிஞ்சிவாணன் எனும் புனைப் பெயருடன் மிக காத்திரமான மூன்று கவிதை நூல்களை வெளியிட்டு இந்ததோடு இவர் 2019ஆம் தனது 74வது வயதில் அமரத்துவம் அடைந்து இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள கலைஞர்கள் கவிஞர்கள் எழுத்தாளர்கள் இலக்கிய செயற்பாட்டார்கள் கல்வியாளர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

# வாகரை காயான்கேணியில் கடலுணவுப் பொருட்கள் விற்பனை நிலையம்

(க.ருத்திரன்)

வாகரை காயான்கேணியில் கடலுணவுப் பொருட்கள் விற்பனை நிலையம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் கிழக்கு மாகாண சபையின் மேற்பார்வையின் கீழ் உள்ளூராட்சி மேம்பாட்டு ஆதரவு திட்டத்தில் உலக வங்கியின் நிதி உதவியில் இவ் கடைத் தொகுதி காயான்கேணி வட்டாரரீதியான முன்மொழிவின் பிரகாரம் வாகரை பிரதேசசபையால் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இவ் விற்பனை நிலையமானது வாகரை பிரதேசத்தில் உள்ள கடலுணவுகளை நுகர்வோருக்கு இலகுவாக சந்தைப்படுத்தும் நிலையமாக எதிர்காலத்தில் செயற்படும்.

கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச சபையின் செயலாளர் எஸ்.வீரசுதாகரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம அதிதிகளாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனா.

கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் என்.மணிவண்ணன், வாகரை பிரதேச செயலாளர் ஜீ.அருணன் ஆகியோர்களும் சிறப்பு அதிதிகளாக வாகரை வைத்தியசாலை வைத்தியர் எச்.எம்.ரி.சசிந்த ,வாகரை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.சில்வா, வாகரை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## எழுதத் தூண்டும் எண்ணங்கள் : 07

# நிஜம் என்பதெல்லாம் நிஜமல்ல, நிஜத்துள் நிஜத்தைக் காண்பதே நிஜம்.

*நமது வாழ்வியல் அம்சங்களைப்
போலிகள் நீக்கி
உண்மை அறிந்த தெளிவுடன் பின்பற்றுவோம்*

ஒவ்வொரு மனிதனும் சந்வேதாசமாக, மகிழ்ச்சியாக மனநிறைவோடு வாழ்கின்றானா எனக் கேட்டால் இல்லை என்றே பதில் வரும். காரணமென்ன அவன் அவனாக வாழவில்லை. அவனுக்கேற்ற வாழ்வும் வாழவில்லை. இருப்பதைக் கொண்டு சந்தோசமாக வாழவும் முயற்சிக்கவில்லை. இல்லாத ஒன்றைப் பற்றிக் கவலைப் பட்டுக் கொண்டு அமைதியான சந்தோசமான வாழ்க்கையைத் தொலைத்துக் கொண்டிருக்கிறான். சரி, இல்லாத ஒன்றைப்பற்றிக் கவலைப் படுகிறாய் என்றால் அதனை அடைவதற்கு முயற்சி செய்தாயா? அதுவும் இல்லை. அட முயற்சித்துப் பாரேன் நீ எதிர் பார்த்த வாழ்வு உன் காலடியில் கிடக்கும். முயற்சிக்காமல் கனவு காண்பதில் எந்தப் பயனுமில்லை. வாழ்க்கையில் ஏக்கமும் ஏமாற்றமுமே மிஞ்சும். மனிதன் மனிதன் அவன்தான் மனிதன், வாழும் போது செத்துச் செத்துப் பிழைப்பவன் மனிதனா.. என்ற பாடலடியும் நிமிர்ந்து நில் துணிந்து செல் தோல்வி கிடையாது தம்பி.. என்ற பாடலடியும் நமது வாழ்க்கையைப் பெறுமதியானதாக மாற்றுவதற்கு உதவுகின்றன. பிறர் வாழ்க்கையை நாம் வாழ்வதும் தப்பு. நமக்குரிய வாழ்க்கையை வாழாமல் விடுவதும் தப்பு என்பதைப் புரிந்து கொண்டு இலட்சியத்தோடு முயற்சி செய்து வாழப் பழகினால் வாய்ப்புக்கள் உனக்காகக் காத்திருக்கும். இல்லையெனில் வாய்ப்புக்களே உனக்குப் பிரச்சினையாகத் தோன்றும். 'மயற்சி திருவினையாக்கும்' என்பதைக் கரம் பற்று, உன் முயற்சி ஒருபோதும் உன்னைக் கைவிடாது.

நீ முயற்சி செய்யும் போது பல கரங்கள் உன்னை வீழ்த்த முயற்சி செய்யும். நீ வீழ்ந்தாலும் நீயாகவே எழுந்திருந்து உனது இலக்கை நோக்கி நம்பிக்கையுடன் பயணம் செய். உனது எதிர்காலம் ஒளிமயமாகும். முயற்சி செய்யாமல் எதனையும் சாதிக்க முடியாது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள். உனது தெளிவான பயணத்தில் போலிகளுக்கும், மூடநம்பிக்கைகளுக்கும் இடம் கொடுக்காதே. மனதில் தோனறும் சலனம், சஞ்சலம், அவசரம், பயம், பீதி, அவநம்பிக்கை என்பவற்றுக்கு இடம் கொடுத்தாயானால் நிச்சயம் தோல்வியைத் தவிர வெற்றியை அடைய மாட்டாய். உனது நேரான பாதையில் நெஞ்சில் உறுதியும் உரமும் கொண்டு தோல்வியைக் கண்டு துவண்டு விடாது விடாமுயற்சியோடு முன்னேறு, நீ அடைய நினைத்தவை யாவும் உன் காலடியில் வந்து சேரும். நம்பிக்கைதான் வாழ்க்கை. நம்பிக்கையோடு கை வைத்து எதனையும் தொடங்கு நீ தொடங்கியது எல்லாமே உன்வசமாகும்.

பெறுமதியான வாழ்க்கையில் போலிகளுக்கும், முடநம்பிக்கைகளுக்கும் இடம் கொடுத்து நம்பிக்கையை இழந்துவிடாமல் பாதுகாத்துக் கொள்ள வெண்டும். போலிகளும் மூடநம்பிக்கைகளும் நம்மைப் பாதித்து நமது பெறுமதியான வாழ்க்கையைச் சிதைத்து விடலாம். உண்மை அறிந்து தெளிவுடன் செயற்படுவதே சிறந்த வாழ்க்கையாகும். அந்த வாழ்க்கையைப் பின்பற்றி வாழ்வதே நம்பிக்கையான வாழ்க்கையாகும். மரபுகள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள், பண்பாடு, ஒழுக்கம், விழுமியம், ஆன்மீகம் யாவுமே இவ்வுலகில் மனு வாழ முன்னோரால் உருவாக்கப்பட்டவைகள் ஆகும். நல்ல நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டவை பலவற்றை அதிபுத்திசாலிகள் எனத் தம்மை நினைத்துக் கொண்ட மேதாவிகள் அவற்றைத் தமது குலம், கோத்திரம், சாதி, மதம், மரபு, சம்பிரதாயங்களுக்காகத் தமன்குச் சாதகமாகப் பயன்படுத்தித் தமது குலம், கோத்திரம், சாதி சம்பிரதாயங்களை



முதன்மைப் படுத்துவதற்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள். இதற்குக் காரணமாக இருந்தவர்கள் பிராமணர்கள், தீட்சிதர், நம்பூதிரிகள், அரச சபையில் இருந்த சில மந்திரிமார்கள், தளபதிகளுமாவர். அதிலும் கோயில், பூசை, புன்ஸ்காரம், மேல்சாதி, கீழ்சாதி என்ற பற்போக்குத் தனமான சிந்தனைகளை அரசனுக்குப் போதித்து அவனின் மனதை மாற்றியவர்கள் அப்போது அரசனுக்கு ஆலோசகல்களாக இருந்த புரோகிதர்கள் எனப்படும் பிராமணர்கள் ஆவர். அந்தக் காலத்தில் அதிகம் படித்தவர்களாக பிராமணர்களே இருந்தார்கள். அவர்கள் வேதங்கள், ஆகமங்கள், சமய சாத்திரங்கள் ஆகியவற்றைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு செயற்பட ஆரம்பித்தார்கள். அதற்கு அரசர்களும் பக்கபலமாக இருந்தார்கள்.

இருக்கு வேதத்தில் புருஷ சூத்மம் என்னும் பகுதியில் பிராமண, சத்திரிய, வைசீக, சூத்திரர் என்ற சாதிப் பகுப்புப் பற்றிக் கூறப்படுகிறது. சாதிப் பகுப்பு முறை உண்மையில் நல்ல நோக்கத்துக்காகவே உருவாக்கப்பட்டிருந்தன. அவற்றை அந்தணர்கள் (பிராமணர்) தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திப் பிம்மாவின் சிரசில் இருந்து பிராமணரும், புயத்தில் இருந்து சத்திரியரும், தொடையில் இருந்து வைசீகரும் பாதத்தில் இருந்து சூத்திரரும் தோன்றியதாகக் கூறித் தம்மை உயர்த்திக் கொண்டனர். அதிலும் ஆண்களுக்கே முக்கியத்துவமளித்து பெண்களை அடக்கி, ஒடுக்கி வீட்டுக்குள் வைத்துக் கொண்டனர். இந்நிலை தற்போதும் இந்தியாவில் அக்கிரகாரங்களில் காணப்படுகிறது. அவர்கள் பெண்களை வீட்டுக்குள் அடக்கி வைப்பதற்காக ஊருவாக்கிய மரபுகள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள் பலவற்றை ஏன், எதற்கு என்றில்லாமல் கண்மூடித்தனமாகப் பின்பற்றி வருகின்றோம். இதனை மேல்தட்டு, மத்தியதர வர்க்கத்தினர் பலரும் விடாப்பிடியாகக் பின்பற்றி வருகின்றனர். இது பற்றி 3, 4, 5, 6வது கட்டுரைகளிலும் சுட்டிக் காட்டி இருக்கிறேன். நாம் கண்மூடித்தனமாக சில மரபுகள், சம்பிரதாயங்களைப் பின்பற்றுவதையும், ஆலயங்கள், வீடுகளில் ஐயர்மாரின் கதையை முற்று முழுதாக நம்பி வீண் செலவு செய்வதைத் தவிர்த்துக் கொள்வோம்.

உலகின் இயக்கத்தக்கு ஏற்பவும், பருவகால, காலநிலை மாற்றங்களுக்கு ஏற்பவும், சில நியதிகளுக்கு அமையவும் உலகில் ஒவ்வொரு நிகழ்வுகளும் நடந்தேறுகினறன. இந்த மாற்றம் மூலத்தில் இருந்து படைக்கப்பட்ட யாவற்றிலும் இயற்கையாக நிகழும். இந்த மாற்றங்களுக்குக் காரணமாக இறைவனின் ஐந்தொழில்களும், ஐம்பூதங்களும் அதற்குரிய தெய்வங்களும் கிரகங்களும் அமைவதாக இந்துமதம் கூறுகிறது. மூலமாகிய பரப்பிரமம் ஐந்தொழில்கள், கடமைகள், பொறுப்புக்களை கடவுளர்களுக்கும், தெய்வங்களுக்கும், கிரகங்கள் மற்றும் அதிதேவதைகளுக்கும் பிரித்துக் கொடுத்திருப்பதாகவும் அறிகிறோம். அதன் அடிப்படையிலேயே இந்த உலகம் இயங்கிக் கொண்டிருப்பதாக நம்புகிறோம்.

இந்துக்களில் பெரும்பாலானோர் சகுணங்கள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றைத் தீவிரமாகக் கடைப்பிடித்து வருகின்றனர். இயறகை வழிபாடு இன்றும்கூடப் பல இடங்களில் பின்பற்றப்பட்டு வருகின்றன. ஆட்டுச் சடங்கு, குறி சொல்லுதல், கட்டுச் சொல்லுதல், தெய்வங்களைக் கட்டுதல், மீண்டும் உருக் கொடுத்தல், தீ மிதித்தல், அலகு போடுதல், அலுகு போட்டு முள்குத்திக் காவடி எடுத்தல், பறவைக் காவடி எடுத்தல் ஆகியன பெருமளவு பக்தர்களின் பங்களிப்புடன் பக்தியோடு பின்பற்றப்படுகின்றன. கிராமத்து மக்கள் மத்தியில் இந்த சமய நெறிமுறைகள், சம்பிரதாயங்களுக்குப் பெருமளவு வரவேற்பும் உணர்வு பூர்வமான பக்தியும் காணப்படுகின்றன. இவை அவர்களது சமய, சம்பிரதாய நம்பிக்கையோடு கலந்த உணர்வுகளாகவும் காணப்படுகின்றன.

இந்து மதத்தில் காலாகாலமாகப் பின்பற்றி வந்த சில பழக்க வழக்கங்கள் இப்போது சில இல்லாமல் போய் விட்டன. இன்னும் சில மருவிச் சென்று கொண்டிருக்கின்றன. முன்பிருந்த நரபலி எனப்படும் மனிதபலி இல்லாமல் போய்வவிட்டது. மிருகபலி ஒரிரு இடங்களில் மாத்திரம் அரச அனுமதி பெற்று நடைபெறுகின்றது. அதேபோல் உடலை வருத்திச் செய்யும் சில வழிபாட்டு முறைகளும் அருகிச் சென்று கொண்டிருக்கின்றன. முன்பு பின்பற்றிய பல மரபுகள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்ககள் குறைந்து கொண்டு செல்கின்றன.

சாத்திரம் பார்த்தல், கெடுதி கேட்டல், குறிபார்த்தல், காண்டம் பார்த்தல், வெற்றிலை வைத்துக் கேட்டல் ஆகியன ஒருவரின் விருப்பம், பலவீனம் என்பவற்றோடு தொடர்புபட்டது. சிலர் எதிர்கால பலனை அறிந்து கொள்ள விரும்புகின்றனர். சிலர் எதிர்காலத்தை அறிந்து கொள்வதனால் வீணான கவலையும், வேதனையுமே உருவாகும். அதனால் அதைப்பற்றி அறிந்து கொள்ள விரும்புவதில்லை என்கின்றனர். தினமும் இராசி பலன் பத்திரிகைகளில் வருகின்றன. அதேபோல் வானொலி, தொலைக்காட்சி சேவைகள், சமூக ஊடகங்கள் ஆகியவற்றிலும் கூறப்படுகின்றன. ஒரு இராசி, நச்சத்திரத்தின்மீது ஒவ்வொரு கிரகங்களும் பார்க்கின்ற பார்வை மாறாதது. அவை ஒரு இராசியில் இருந்து இன்னொரு இராசிக்கு மாறும் போதே அதன் பார்வையும் பலன்களும் மாறுபடும். அவ்வாறு இருக்கையில் குறித்த தினத்துக்குரிய பலனை இராசி பலன் கூறுவோர் ஏன் வேறுபட்டு மாற்றி மாற்றிக் கூற வேண்டும். பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி, சமூக ஊடகங்கள் எல்லாவற்றிலும் வேறுபட்ட பலன்கள் கூறப்படுகின்றன. ஒருவர் குறித்த இராசிக்குக் குறித்த தினத்தில் கெட்ட பலன் கூறுகின்றார். இன்னொருவர் அத்தினத்தை நல்ல நாள் எனக் கூறுகின்றார். இது எப்படி, எவ்வாறு சாத்தியமாகும். அல்லது எழுந்தமானமாகப் பணம் சம்பாதிப்பதற்காகக் கூறுகின்றனரா? இதில் எது உண்மை. எது பொய் எனக் கேட்கத் தூண்டுகிறது. இதற்குள் பல



ஏமாற்றுத் தனங்களும், பித்தலாட்டமும், நமது பலவீனமும் சேர்ந்து பலரைப் பணம் சம்பாதிக்க வைக்கிறது.

முன்பு வாழ்ந்தவர்கள் எல்லாவற்றையும் இயற்கையை மையப்படுத்தியே தீர்மானித்தனர். சகுணம் பார்த்தனர், சூரியன், கிரகங்கள், நச்சத்திரங்கள், பறவைகள், இயற்கைத் தாவரங்கள், முகில்கள்,நிலத்தில் தெரியும் நமது நிழல் ஆகியவற்றைக் கொண்டு காலத்தையும், நேரத்தையும், காலநிலையையும் கணிதத்தனர். இயற்கையின் படைப்புக்களைத் தனது உணவாக உட்கொண்டனர். தாவர உணவுகள், மச்சம், மாமிசம் என்பவற்றையும் எணவாக உட்கொண்டனர். அவை அவர்களுடைய வாழ்க்கையாக மாறி இருந்ததன. இப்போது அவற்றில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. 20 ஆம் நூற்றாண்டு ஆரம்பம் வரை சைவ உணவாக இருந்த மச்சம், மாமிசம் ஆகியன இப்போது சைவ உணவு வகையில் இருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைப் பல ஆதாரங்களுடன் பல ஆய்வாளர்கள் நிரூபித்துள்ளனர். அண்மையில் தேன்நாடு (02-07-2023) மின்னிதழில் இலங்கைநாதன் குகநாதன் என்பவர் வழங்கிய தகவலுடன் எனது ஆதாரங்களையும் சேர்த்து முன்வைக்கின்றேன்.

மீன் சைவ உணவு ஆகுமா? ஆகும் என்ற தலைப்பில் அக்கட்டுரை வெளிவந்துள்ளது. சிந்துவெளி அகழ்வாய்வுகளில் இருந்து மச்சம் எனப்படும் புலால் உணவு தமிழர்கள் மத்தியில் சைவ உணவாகக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை அறிய முடிகிறது. இந்துக்களின் யாகங்களில் மாட்டிறைச்சி உட்படப் பல இறைச்சி(மாமிசம்) வகைகளை ஆகுதியாகப் படைத்து வந்ததோடு, அந்தணர்கள் (பிராமணர்கள்) இறைச்சி மீன் ஆகியவற்றைச் சாப்பிட்டும் வந்தனர். யாகங்களில் ஆகுதிகளாகப் பல மிருகங்கள் கொல்லப்பட்டதையும், மிருகங்கள் பலி கொடுக்கப்பட்டதையும் பார்தது வெறுப்புற்று புத்தரும், மாவீரரும் இந்து மதத்தில் இருந்து வெளியேறனர். பின்னர் புத்தர் பௌத்த மதத்தையும், மாவீரர் சமண மதத்தையும் தோற்றுவித்தார்கள். இந்த இரு மதங்களும் கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகிய கொள்கைகளை வலியுறுத்தித் தமிழ்நாட்டில் பிரச்சாரம் செய்து வந்தன. கி.பி இரண்டாம் நூற்றாண்டில் இருந்து தமிழ்நாட்டில் சமணர்களின் ஆதிக்கம் பெருகவே அவர்களின் கொள்கையும் பிரபல்யம் பெற ஆரம்பித்தன. சமணத் துறவிகள் பரிநிர்வாணக் கொள்கையைக் கடைப்பிடித்ததோடு கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகியவற்றையும் தீவிரமாகக் கடைப்பிடித்து வந்தனர். அதனைக் காலப் போக்கில் ஒரு சில அந்தணர்களும் பின்பற்றத் தொடங்கினர்.

சுவாமி விவேகாநந்தர் அமெரிக்கா கலிபோனியாவில் சேக்ஸ்பியர் கிளப்பில் 1900 ஆம் ஆண்டு பெப்ரவரி 02 ஆந் திகதி ஆற்றிய உரையில் மாட்டிறச்சியைச் சாப்பிடாதவன் நல்ல இந்து அல்ல (He is not a good Hindu who does not eat beef) எனக் கூறி இருக்கின்றார். இது அவரது அமெரிக்கப் பிரசங்கத் தொகுதி- 3 இல் வெளிவந்திருக்கிறது. கண்ணப்ப நாயனார் திருக்காளகஸ்தி நாதருக்கு மாமிசத்தை சாதமாகப் படைத்து முத்தியடைந்திருக்கின்றார். அதிபத்த நாயனார் இறைவனுக்குத் தினமும் தானமாக மீனைக் கொடுத்து முத்தியடைந்திருக்கின்றார். திருநாவுக்கரசு நாயனார் ஆறாம் திருமுறை திருத்தாண்டகத்தில் 'சங்கநிதி பதுமநிதி' எனத் தொடங்கும் தேவாரத்தில் 'அங்கமெல்லாம் குறைந்தழுகித் தொழுநோயராய், ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும், கங்கைவார் சடைக்கரத் தார்க்கன் பராகில், அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே எனவரும் நான்கு வரிகளில் மாட்டிறைச்சி சாப்பிடுவோரின் பக்தியினைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட கோயில்களில் நந்திக்கு முன்னாலுள்ள பலிபீடம் அக்காலத்தில் மிருகங்களைப் பலி கொடுக்கும் இடமாக இருந்ததனாலே அது பலிபீடம் என அழைக்கப்பட்டதாக மறைமலை அடிகள் குறிப்பிடுகின்றார். மேற்கு வங்காளத்தில் உள்ள அந்தணர்கள்(பிராமணர்) மீனைக் கடல் புஸ்பம், நீர்ப் புஸ்பம் எனக் கொண்டு மீனைச் சாப்பிட்டுக் கோயிலுக்குச் செல்கின்றனர். அதேபோல் காசி மற்றும் இமயமலை அடிவாலங்களில் சில பிரதேசங்களில் வாழும் சிவனின் தீவிர பக்தர்களான அகோரிகள் மனித, மாமிச உணவுகளை உண்பதாகவும் கூறப்படுகிறது. பாண்டிச்சேரி ஆளுனர் தமிழிசை புலாலை இந்துக்களின் சைவ உணவாக அறிக்க வேண்டும் எனப் பாண்டிச்சேரி, தமிழ்நாட்டு அரசுகளைக் கேட்டிருக்கின்றார். இந்துக்கள் மச்சம், மாமிச உணவினை மரக்கறி (Vegit) மரக்கறி அல்லாத(Non Vegit) என்றுதான் கூறுகின்றனரே தவிர சைவ உணவு அல்லாதது எனக் கூறவில்லை.

அவ்வாறு இருபதாம் நூற்றாண்டின் முதலிரு தசாப்தங்களுக்குப் பின்னர் இருந்து இந்து மதத்தில் ஏற்பட்ட புத்தாக்கங்களும் கோயில்களில் மிருகபலி தொடர்பான எதிர்ப்புக்களும் பிற்காலத்தில் மச்சம், மாமிசத்தை ஒதுக்கி வைத்தனரே தவிர அவை சைவ உணவு அல்ல எனக் குறப்படவில்லை. இது தொடல்பாக ஆய்வு செய்து ஒரு பத்தகம் எழுதி நிரூபிக்கலாம். இக்கட்டுரையல் சில முக்கியமான தகவல்களை மட்டும் சுருக்கிக் கூறியிருக்கிறேன். இன்றுங்கூட இந்தியாவின் பல பிரதேசங்களில் உள்ள கோயில்களில் பக்தர்கள் ஆடு, மாடு, கோழி ஆகியவற்றைப் பலிகொடுத்து, சமைத்துப் படைத்து உண்டு மகிழ்ந்து செல்வதையும் அறிகிறோம்.

நமது வாழ்க்கையில் பெரும்பாலானவை உண்மை எது, போலி எது என்பது பற்றிக் கண்டு கொள்ளாமலேயே காலத்தைக் கழித்து விடுகிறோம். ஒருவருக்கு அடிக்கடி வயிற்றுவலி வந்தால் ஒருவர் செய்வினை என்பார், இன்னொருவர் சாப்பட்டுக்குள் ஏதோ மருந்து போட்டுக் கொடுத்துவிட்டனர் என்பார். மற்றுமொருவர் இது குடல்புண்ணால் ஏற்பட்ட வேதனை வைத்தியரைச் சந்தியுங்கள். அல்லது அதற்குரிய பரிகாரத்தைச் செய்யுங்கள் என்பார். இதற்குரிய தீர்வினை நோயாளிதான் எடுத்தல் வேண்டும். போலியை மறந்து உண்மை அறிந்து சரியான தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்காகவே இறைவன் நமக்குப் பகுத்தறிவைக் கொடுத்திருக்கிறான்.

*எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பதிழுக்கு திருக்குறள்.*

**கருமம் தொடரும்.**



சோலையூர்க் குருபரன்

# நாட்டிலே பாரிய ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது ஊடகங்களே!

## காரைதீவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் பேச்சு





( வி.ரி. சகாதேவராஜா)

நாடு கடந்த ஆட்சியில் அதலபாதாளத்துக்கு சென்று கொண்டிருந்த பொழுது அந்த நாட்டை மீட்டு பாரிய ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது ஊடகங்களே. ஒரு நாட்டின் முதுகெலும்பு ஊடகம் என்றால் அது மிகைஅல்ல.

இவ்வாறு அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன், காரைதீவில் வெற்றி நியூஸ் ஊடக மையத்தை திறந்து வைத்து பேசிய போது குறிப்பிட்டார்.

காரைதீவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக, கிழக்கிலங்கையின் புகழ்பெற்ற சிவாச்சாரியார் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் சமய வழிபாடு கிரியைகளை மேற்கொண்டு,, ஆசியுரை நிகழ்த்தி அதனை ஆரம்பித்து வைத்தார். பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் நாடாவெட்டி புதிய ஊடக மையத்தை திறந்து வைத்தார்.

அங்கு கோடீஸ்வரன் மேலும் பேசுகையில்..

நாட்டிலே முன்னர் கோர ஆட்சி இடம்பெற்றது .ஏழு லட்சம் பேர் வேலை இழந்தார்கள். பிழையான கொள்கை, அத்தியாவசிய சேவை மற்றும் விவசாயத்திலே கை வைத்தார்கள். ஊழல்கள், மோசடிகள் மலிந்தன. நாடு பின் தள்ளப்பட்டது. இவற்றை வெளிச்சத்திற்கு கொண்டு வந்து பாரிய ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது ஊடகமே.

இன்று அத்தகைய ஊடகங்களுக்கு எதிராக பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டுவர எத்தனிக்கிறார்கள். அப்படியானால் ஊடகங்களின் குரல்வளை நசுக்கப்படும். எனவே, தமிழ் தேசிய கூட்டமைப்பினராகிய நாங்கள் அதனை முற்றாக எதிர்க்கின்றோம்.

கடந்த காலத்திலே தமிழுக்கும் தேசியத்துக்குமாக பயணித்த சிவராம் ,நடேசன், நிர்மலராஜன் போன்றோர் படுகொலை செய்யப்பட்டார்கள். ஆனால், இன்றும் அவர்கள் நினைவு கூரப்படுகின்றார்கள் என்றால் அவர்கள் பக்க சார்பின்றி நியாயமாக ஊடக தர்மத்தின் படி சேவை ஆற்றியவர்கள்.

வெற்றி நியூஸ் இணையத்தள இளம் இளைஞர்கள் நீங்கள் பாக்கியசாலிகள். ஏனெனில் உங்களுக்கு பக்கபலமாக இலங்கையில் அதி சிறந்த ஊடகவியலாளர் அண்ணன் சகாதேவராஜா அவர்கள் இருப்பது நிச்சயமாக வெற்றி தரும்.

எனவே, சமூக ரீதியாக நீங்கள் இயங்கி பக்கச்சார்பற்று சிறப்பாக நீங்கள் இயங்க வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

நிகழ்வில் சமூக சேவையாளர்களான கதிர்.செல்வபிரகாஷ் ஞானேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

வெற்றி நியூஸ் இணையதளத்தைச் சேர்ந்த சங்கீத், சனுசன், தசானந்த் ஆகியோர் நோக்கம் பற்றி பேசினர்.

நிகழ்வில் காரைதீவு பிரதேசசபை செயலாளர் ஏ. சுந்தரகுமார், இளங்கவிஞர் விபுலசசி உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தார்கள்.

# மன்னாரில் ஆடிப்பிறப்புக் கொண்டாட்டம்







( வாஸ் கூஞ்ஞ)

வடக்கு மாகாண கல்வி . பண்பாட்டலுவல்கள் . விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மன்னார் மாவட்ட செயலகத்தின் ஒழுங்கமைப்பில் ஆடிபிறப்பு கொண்டாட்டம் மன்னாரில் நடாத்தப்பட்டது.

மன்னார் மாவட்ட செயலகத்தில் திங்கள் கிழமை (17) காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் படத்திற்கு அரசாங்க அதிபரால் மலர் மாலை அணிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கலந்து கொண்ட மாவட்ட செயலக அலவலர்கள் மலர் வணக்கம் செலுத்தினர்.

மன்னார் மாவட்ட கீதம் இசைக்கப்பட்டதுடன் சாஸ்மிதாஞ்சலி நாத்தனாலயம் செல்வி உசாந்திக்கா உதயராஜ் வரவேற்பு நடனத்தை; தொடர்ந்து மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ய.பரந்தாமன் வரவேற்புரை இட்மபெற்றது.

'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுமுறை' என்ற கருத்தில் மாவட்ட செயலக அலுவலர்களால் பாடல் இசைக்கப்பட்டது.

மடு பிரதேச செயகதத்ணீன் அபிவிருத்தி அலுவலர் மனோகராசா பிரதீபன் அவர்களால் 'ஆடி மாத்தின் சிறப்பு' என்ற தலைப்பில் சிறப்ப சொற்பொழிவு இடம் பெற்றதுடன் மன்னார் அரசாங்க அதிபரும் இங்கு உரையாற்றினார்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் வடமாகாண ரீதியாக நடைபெற்ற வெசாக் பக்தி கீதத்தில் பங்குபற்றிய மன்னார் மாவட்ட அலுவலர்களுக்கு 'மெக்கரை சான்றிதழ்' வழங்கும் நிகழ்வுடன்

சமூர்த்தி 'ரன்வீமன' வீடமைப்பு திட்டத்ணீன் பயனாளிகள் சிலருக்கு முதல் கட்டமாக ரூபா 150000 சாசோலைகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் மன்னார் மாவட்ட செயலகத்தில் மிகவும் சிறப்பான முறையில் கலாச்சார மற்றும் சமூக சேவையில் ஈடுபட்டுவரும் மன்னார் சிரேஷ்ட கலாச்சார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் இந்த மேடையில் வைத்து கலைச் சேவகன் என்ற விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. ஆடிக்கூழும் இங்கு பரிமாறப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# விமான நிலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கை விமான நிலையம் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட உலகில் சிறந்த விமான நிலையமாக இயங்கும். என விமான சேவைகள், கப்பல்துறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இலங்கை சிவில் விமான சேவைகள் தினத்தினை முன்னிட்டு ஜுலை 15ஆம் தேதி கட்டுநாயாக்காவில் உள்ள சிவில் போக்குவரத்து விமான சேவைகள் நிலையத்தில் ஊடகவியலாளர்கள் மாநாட்டில் உரையாற்றும் போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்

இத் திட்டத்தினால் இலங்கை விமான நிலையத்தில் தனது முகத்தை டிஜிட்டல் முறையில் பதிவு செய்து அவரது விசா விஷயங்கள், வங்கி முறைகள், உள்ளூர் ஹோட்டல்கள், போக்குவரத்து, மற்றும் அவரது சகல பொதிகளை இலகுவாகப் பெறவும் குறுகிய நேரத்தில் இலகுபடுத்தல் போன்ற சகல விடயங்கள் முன்னெடுக்கப்படும். .உலகில் உள்ள நாடுகளில் துபாய். சிங்கப்பூர் நாடுகள்



மட்டுமே டிஜிட்டல் மற்றும் சிவில் விமான சேவை உலக பாதுகாப்பு முறையில் விருத்தி பெற்றது அதே தரத்திற்கு வருவதற்கு எமது உலகளாவிய விமான சிவில் பாதுகாப்பு, சிக்னல் , விமான தரை ஓட்ட அபிவிருத்தி பெட்ரோலியம் போன்றவற்றில் எதிர்காலத்தில் நாம் அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

. எமது நாட்டில் கடந்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார பிரச்சினை, கொவிட் 19 போன்ற விஷயங்களில் நமது விமான சேவைகள் பின்னடைவை பெற்றன. தற்பொழுது நாம் அதிலிருந்து விடுபட்டு சிறுக சிறுக மீள் வளர்ச்சியடைந்து வருகின்றோம்.. இலங்கை விமான நிலையம் இலங்கை அரசின் பங்குகளாக 50 வீதமாகவும், 49 வீதம் தனியார் கம்பனிக்கும் 1 வீதம் ஊழியர்கள் பங்கு எதிர்காலத்தில் பரினமிக்கும். ஜப்பான் நாட்டின் ஜயிக்கா உதவியுடன் விமான நிலைய சில அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.எமது விமான நிலைய ஊழியர்கள் விமான ஓட்டிகள் பொறியியலாளர்களின் எவ்வித இடைஞ்சலும் இன்றி 50 வீத சம்பள வழங்கினோம். ஆனால் கொவிட் காலத்தில் குவைத் நாடுகளில் கூட விமான ஊழியர்களை அகற்றினார்கள் தற்பொழுது மீள சேர்த்துக் கொள்வார்கள் நாம் அவ்வாறு செய்யவில்லை. நமது விமானங்கள் ஓடாவிடடாலும் நாம் சம்பளம் வழங்கினோம்.

தற்போது எமது நாட்டில் 69 வீதம் சர்வதேச விமான போக்குவரத்து சீர்செய்யப்பட்டு ஒழுங்கான முறையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. உலக நாடுகளில் கூட 69 வீதத்தில் விமான போக்குவரத்துகள் தற்பொழுது 96 வீதம் மீள் வருமானத்தினை அடைந்து வருகின்றது

. இலங்கையில் 215 விமான ஓட்டுனர்கள் இருந்தனர் அதில் ஒரு சிலர் தமது கூடிய சம்பளத்திற்கு வெளிநாடுகளுக்குச்

சென்றுள்ளார்கள். அதனை எங்களால் நிறுத்த முடியாது. 5 எயார் லங்கா விமானங்கள் பழுதடைந்து தரித்து நிறுத்தப்பட்டுள்ளது. அதனை திருத்தி அமைப்பதற்கு வெளிநாட்டுக் கம்பெனிகள் இலங்கைக்கு வர வேண்டும்.

விமான நிலையத்தினை மீள கட்டமைப்புக்குரிய அமைச்சரவை அனுமதி பெறப்பட்டு அதற்கான கேள்வி கோரப்படும்.. தற்பொழுது இந்தியன் விமானம் 7 நாட்களும் இலங்கை வருகின்றன அதனை விட மேலதிகமாக யாழ்ப்பாணம் விமான சேவை நடைபெறுகிறது. ஹம்பாந்தோட்டை விமான நிலையத்தினையும் நாம் பயன்படுத்துவதற்கு முயற்சிக்கின்றோம். அத்துடன் இரத்தமலானை விமான நிலையம் செயற்படுகின்றனத. எதிர்காலத்தில் உள்ளூர் விமான நிலையங்கள் மீள கட்டமைக்கப்படும். என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்

இந் நிகழ்வில் சிவில் விமான சேவை அதிகார சபையின் தலைவர், பணிப்பாளர், விமான நிலையத்தின் தலைவர் உப தலைவர்களும் கலந்து கொண்டடினர்.

# 33 வருட கல்வி சேவையிலிருந்து அண்மையில் ஓய்வு



(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திருமதி நிர்மலாதேவி சுகனேஸ்வரன் 33 வருட கல்வி சேவையிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றார்.

அப்புத்தளையை பிறப்பிடமாக கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை அப்புத்தளை லிட்டில்புலவர் கொன்வன்டிலும் இடைநிலைக் கல்வியை பண்டாரவளை சென்மேரிஸ் கல்லூரியிலும் உயர் கல்வியை பண்டாரவளை சென்ஜோசப் கல்லூரியிலும் கற்றார். 1990 ஆம் ஆண்டு ஆசிரியர் சேவையில் இணைந்துகொண்ட இவர். நுவரெலியா புனித சர்வேரியார் கல்லூரியில் தனது முதல் நியமனத்தை பெற்று அங்கு 2 வருடங்கள் கடமையாற்றினார்.

தேசிய கல்வி நிறுவகத்தின் தொலைக்கல்வி ஊடாக தனது ஆரம்பக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியை நிறைவு செய்த இவர் தொடர்ந்து கந்தப்பளை மெதடிஸ்;ட் கல்லூரி, வட்டகொடை தமிழ் மகா வித்தியாலயம், லிந்துலை அக்கரகந்த தமிழ் வித்தியாலயம், லிந்துலை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் ஆசிரியராக கடமையாற்றினார். 2012 ஆம் ஆண்டு நடைப்பெற்ற அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு பிரதி அதிபராக நியமனம் பெற்றார். அங்கு தொடர்ச்சியாக பிரதி அதிபராக சேவையாற்றிய இவர் தனது 60 ஆவது வயதில் கடந்த வாரம் ஓய்வு பெற்றார்.

இவர் அப்புத்தளையை சேர்ந்த முத்துக்கருப்பன் செல்வமணி தம்பதியினரின் மூன்றாவது புதல்வியாவார். 33 ஆண்டுகால கல்விச் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற இவரை தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் கிருஸ்ணசாமி தலைமையில் ஆசிரியர் குழாம், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் ஒன்றியம், உயர்தர மாணவர் குழாம் ஆகியோர் ஒன்றிணைந்து கௌரவித்தனர். இந்நிகழ்வில் அதிபர் கிருஸ்ணசாமி, பிரதி அதிபர் ஜெகதீசன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.



# சாவகச்சேரி - புளியடிச்சந்தி ரயில் கடவையை மீள திறக்க அமைச்சர் பந்துல - அங்கஜன் எம்.பி ஆகியோர் நடவடிக்கை

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட புளியடிச்சந்தி ரயில் கடவையை மீள திறப்பதற்கான நடவடிக்கையை போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ஆகியோர் முன்னெடுத்துள்ளனர்.

பாதுகாப்பற்ற புகையிரத கடவையாக இருந்த புளியடிச்சந்தி பகுதியில் அடிக்கடி ரயில் விபத்துக்கள் நேர்ந்தமையால் கடந்த 2016ஆம் ஆண்டு புகையிரத திணைக்களம் மேற்படி பாதுகாப்பற்ற கடவையை மூடி அடைத்திருந்தனர்.

இந் நிலையில் மேற்படி கடவையை வருடக்கணக்கில் பயன்படுத்தி வந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். பலர் மாற்றுப் பாதைகள் ஊடாகவும்,சிலர் பாதுகாப்பற்ற ரயில் தண்டாவாளத்திற்கு மேலாகவும் பயணம் செய்து வந்திருந்தனர்.



இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஊடாக துறை சார் அமைச்சருக்கு குறித்த கடவையின் அவசியத்தை வலியுறுத்தி கடவையை மீள திறந்து பாதுகாப்பான ரயில் கடவையாக மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தனர்.

மக்களின் கோரிக்கையை ஏற்று 14/07 வெள்ளிக்கிழமை யாழில் இருந்து கொழும்பு நோக்கி ரயிலில் புறப்பட்ட அமைச்சர் பந்துல புளியடிச்சந்தியில் ரயிலில் இருந்து இறங்கி அப்பகுதி மக்களுடன் உரையாடியிருந்தார்.

இதன்போது சாவகச்சேரி நகரசபை ஊடாக ரயில் கடவைக்கு ஊழியர் ஒருவரை நியமிக்கும் பட்சத்தில் எம்மால் தானியங்கி தடை (ரிமோல்ட் கொன்றோல்) ஒன்று அமைத்து பாதுகாப்பான ரயில் கடவையாக புளியடிக் கடவையை மாற்ற முடியும் எனவும்-எனவே கிராம மக்கள் இது தொடர்பாக நகரசபையிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்து ரயில் கடவைக்கு ஊழியர் ஒருவரை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

மேற்படி சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் இணைப்புச் செயலாளர் கு.சிவராம், புகையிரத திணைக்கள உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# விமானங்கள் மீண்டும் வரும் படைத்த நெல்லை க.பேரன்! முழுக் குடும்பத்தோடு மீண்டு வராத துயரமிகு கோரம் !!

**(ஈழத்து இலக்கிய படைப்புக்களில் முத்திரை பதித்த விமானங்கள் மீண்டும் வரும் நாவலை படைத்த நெல்லை க. பேரன், முழுக் குடும்பத்தோடு மீண்டு வராத துயரமிகு கோரம் ஜூலை 15, 1991இல் நிகழ்ந்தது. நெல்லை க. பேரன் நினைவாக இச்சிறப்புக் கட்டுரை பிரசுரமாகிறது)**

கற்பனை உலிகில் சஞ்சரித்துக் கொண்டு காதல் கதைகளை மாத்திரம் எழுதிக் கொண்டிருப்பது எனக்குப் பிடிக்காத விடயம். நான் அன்றாடம் காணும் பொது மக்களையும் அவர்களது சமகாலப் பிரச்சினைகளையும் வாழ்க்கை முறைகளையும் எனது சக்திக்கு உட்பட்டவரை எனது படைப்புக்கள் மூலம் தெரிவிக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும் என 'விமானங்கள் மீண்டும் வரும்' எனும் நாவலைப் படைத்த நெல்லை க. பேரன் தன் முன்னுரையில் எழுதியுள்ளார்.

**ஒரு எழுத்தாளர் குடும்பமே ஒன்றாகப் படுகொலை:**


ஈழத்தில் ஒரு எழுத்தாளர் குடும்பமே ஒன்றாகப் படுகொலை செய்யப்பட்டது என்ற அழியாவடு கொண்டது எழுத்தாளர் நெல்லை க.பேரனின் வாழ்க்கையில் தான். வடமராட்சில் ஜூலை 15, 1991இல் இக் கோரம் நிகழ்ந்தது. எழுத்தாளரும், பத்திரிகையாளருமான நெல்லை க.பேரன், அவரின் மனைவி உமாதேவி, மகன் உமாசங்கர், மகள் சர்மிளா என்று அந்த ஒட்டுமொத்தக் குடும்பமே ஜூலை 15 இரவில் இலங்கை இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

சுவையாகவும், இயல்பாகவும், அனாயாசமாகவும் கதை கூறும் நெல்லை க. பேரனது ஆற்றல் குறுநாவலெங்கும் இழையோடுகின்றது. இதற்கோர் எடுத்துக் காட்டு, விமானங்கள் மீண்டும் வரும் நாவலாகும் என அறிமுக விமர்சனத்தில் செ.யோகராசா குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மத்திய கிழக்கு அனுபவங்கள் உண்மை அனுபவங்களாக, அதுவும் சொந்த அனுபவங்களாகவும் வெளிப்படும்

ஈழத்தின் முதற் குறுநாவலென்ற சிறப்பையும் இது பெற்றுவிடுன்றது எனலாம் என செ.யோகராசா குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்து எழுத்தாளர் நெல்லை க. பேரன் யாழ்ப்பாணம் நெல்லியடியில் கந்தசாமி, பறுபதம் ஆகியோருக்கு 18 திசம்பர் 1946இல் பிறந்தவர். செய்திகள், கட்டுரைகள், சிறுகதைகள், புதினம், கவிதை, நேர்காணல்கள் எனப் பலவும் எழுதியவர். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் பல்தொழில் நுட்ப நிலையம், சட்டக் கல்வி நிலையம் ஆகியவற்றில் கல்வி கற்றவர்.




முடக்காட்டில் ஷெல் வீச்சு
எழுத்தாளர் நெல்லை. க. பேரன் உட்பட நால்வர் பலி
(கரவெட்டி) நெல்லியடியில் உள்ள முடக்காடு எனும் இடத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற எறிகணைத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உயிர் இழந்துள்ளனர்.
நேற்று முன் தினம் இரவு 11 45 மணியளவில் பலாலியில் இருந்து வீசப்பட்ட எறிகணைகள் முடக்காடு எனும் இடத்தில் அடுத்தடுத்து வீழ்ந்தன. அப்பொழுது வீட்டினுள் தூங்கிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பேர்கள் ... நெல்லை க. பேரன் (வயது 45), உமாவதி ... (வயது 36), பே. சர்மிளா (வயது 7), பே. உமாசங்கர் (வயது 15) ஆகியோர் உயிர் இழந்தனர்.
பின்னும் அடக்கம் ... (4 ஆம் பக்கம் பார்க்க)
தென்மராட்சியில் ஷெல் தாக்கி
பல்கலை. விரிவுரையாளர் உட்பட இருவர் ப...
(சாவகச்சேரி)


வடமராட்சியில் எழுத்தாளர் குடும்பமும்
தென்மராட்சிவிரிவுரையாளரும்பலி!

ஆரம்பத்தில் நெல்லை க.பேரன் 1960களின் தொடக்கத்தில் வீரகேசரியில் யாழ்ப்பாண செய்தியாளராகவும், பின்னர் 1966 இல் அஞ்சல் திணைக்களத்தில் எழுத்தராகப் பணியாற்றத் தொடங்கினார். குவைத் நாட்டில் சிறிது காலம் பணியாற்றியுள்ளார்.

இவரது சிறுகதைகள் ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள் மற்றும் சத்தியங்கள் ஆகியன தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன. விமானங்கள் மீண்டும் வரும் என்ற குறுநாவல் இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டியில் முதல் பரிசு பெற்று ஈழநாடு பத்திரிகையில் தொடராக வெளிவந்தது. பின்னர் 1986 இல் நூலாக வெளிவந்தது.

**விமானங்கள் மீண்டும் வரும்:**

ஈழநாடு நிறுவனமும்,யாழ் இலக்கிய வட்டமும் இணைந்து நடாத்திய இரசிகமணி கனகசெந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டியில் விமானங்கள் மீண்டும் வரும் குறுநாவலுக்கு முதலாவது பரிசும் கிடைத்து. ஈழநாடு வார மலரிலும் இந் நாவல் தொடர்ந்து பிரசுரமானது.

ஈழநாடு பத்திரிகையில் இக்கதை தொடராக வந்து கொண்டிருந்த போது தன்னை நேரில் கண்டு பாராட்டி, கடிதங்களை எழுதி உற்சாகப் படுத்தியும், குவைத்தில் தன்னோடு வாழ்ந்த தனது எழுத்துக்களை அறிந்து கொண்ட பல நண்பர்கள் அனுபவங்களை வைத்து கதை எழுதுங்கள் என்று கேட்டதற்கு இணங்க விமானங்கள் மீண்டும் வரும் நாவல்களைப் போல வேறு படைப்புகளையும் தான் எழுத நினைப்பதாக நெல்லை க. பேரன் கூறியுள்ளார்.

தமிழ் இளைஞர்களின் மத்திய கிழக்கு வாழ்க்கையைப் படம் படித்துக் காட்டும் ரீதியில் தமிழ் மொழியில் வெளிவந்த முதலாவது நாவல் இதுதான் என்று பலர் எனக்குச் சொல்லி இருக்கிறார்கள். இதுபோலவே வேறு நாடுகளில் வாழக்கூடிய தமிழ் எழுத்தாளர்களும் நிச்சயமாகத் தம் அனுபவங்களை எழுத வேண்டும் என்பது என் விருப்பமாகும் என விமானங்கள் மீண்டும் வரும் நூலின் முன்னுரையில் நெல்லை க. பேரன் எழுதியுள்ளார்.

குவைத்தில் தான் வாழ்ந்த காலத்தில் பல புதிய அனுபவங்கள் ஏற்பட்டன. தனது சொந்த அனுபவங்ளையும் தொகுத்து நாவல் வடிவில் வெளிக்கொண்டு வரவேண்டும் என்பது தனது நீண்ட நாள் ஆசையாகும் எனக்கூறும் அவர், விமானங்கள் மீண்டும் வரும் நாவல் எல்லாவற்றையும் விட இன்னொரு காரணத்திற்காக நெல்லை க.பேரன் பாராட்டுக்குரியவராகின்றார்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா

சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் என்று பாடியவன் பாரதி. இன்று மத்திய கிழக்கு செல்பவர் பலராயிருந்தாலும் கலைச்செல்வம் - கதைச் செல்வம் அளிப்பவர் எத்தனை பேர்? அவ்விதத்தில் ஒரு குறுநாவல் செல்வத்தை இவர் தந்துள்ளார் என்பதற்காகவும் பாராட்டுக்குரியவரன்றோ என விமர்சன உரையில் செ.யோகராசா குறிப்பிட்டுள்ளார்.

பெரிய மீன் சின்னமீனை விழுங்குகின்றது. மனிதன் மனிதனை விழுங்குகின்றான். நல்ல மனங்களை நோகச் செய்யும் பான்மையும் விட்டுக் கொடுப்புக்கள் இல்லாமல் சமூக அநீதிகளுக்கு உரமூட்டும் செய்கைகளும் மலிந்து சமுதாயம் நலிவடைந்து செல்கின்றது.

குவைத்தில் தான் வாழ்ந்த காலத்தில் பல புதிய அனுபவங்கள் ஏற்பட்டன. தனது சொந்த அனுபவங்ளையும் தொகுத்து நாவல் வடிவில் வெளிக்கொண்டு வரவேண்டும் என்ற எனது நீண்ட நாள் ஆசை என தெரிவித்த நெல்லை க. பேரன், முழுக் குடும்பத்தோடு துயரமிகு கோரமாக, அந்த ஒட்டுமொத்தக் குடும்பமே 1991 ஜூலை 15 இரவில் இலங்கை இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

**நெல்லை க. பேரன் எழுதிய நூல்கள்:**

நெல்லை க. பேரன் எழுதிய நூல்களாவன: ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள் (சிறுகதைகள், 1975), விமானங்கள் மீண்டும் வரும் (புதினம்), வளைவுகளும் நேர்கோடுகளும் (புதினம், 1978), சத்தியங்கள் (சிறுகதைகள், 1987), பேரனின் கவிதைகள், சந்திப்பு (நேர்காணல்கள், 1986).

ஈழத்து இலக்கிய படைப்புக்களில் முத்திரை பதித்த விமானங்கள் மீண்டும் வரும் நாவலை படைத்த நெல்லை க. பேரன், முழுக் குடும்பத்தோடு மீண்டு வராத துயரமிகு கோரம் ஜூலை 15, 1991இல் நிகழ்ந்தது.

